# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 215/மா/2025

நாள்: 24.07.2026

கோ.ம. சங்கர்,
சென்னை–600 091. --- முறையீட்டு மனுதாரர்

கண்காணிப்பு பொறியாளர்,
Smart City Projects (Gender and Policy Lab Department),
பெருநகர சென்னை மாநகராட்சி.
சென்னை–600 003. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 091, மடிப்பாக்கம், லட்சுமி நகர் மெயின் ரோடு, கதவு எண் 578 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ.ம.சங்கர் என்பவரின் 02.06.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று பெறப்பட்டு 215/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 091, மடிப்பாக்கம், லட்சுமி நகர் மெயின் ரோடு, கதவு எண் 578 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ.ம.சங்கர் என்பவர் தனது 02.06.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கடந்த 29.05.2025 அன்று சென்னை பெருநகர மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளங்களான முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் ஒரு பெண்குழந்தையின் புகைப்படம் வெளியாகியது. அந்த பெண்குழந்தையின் தலையில் குப்பைகள் உள்ளது போல வடிவமைக்கப்பட்டிருந்ததை கண்டு உடனடியாக ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் மின்னஞ்சல் மூலமாக புகார் கடிதமும், சென்னை மாநகராட்சி இணைய வழி புகார் மூலமாகவும் பதிவு செய்தேன். ஆனால் எனது புகார் மீது எந்தவொரு நடவடிக்கையும், பதிலும் அளிக்காமல் கடந்த 30.05.2025 அன்று நடிகர் யோகிபாபுவின் படத்துடன் மீண்டும் அதே பெண்குழந்தையின் தலையில் குப்பைகளுடன் உள்ள புகைப்படம் வெளியாகியது. அதன்பிறகு ஒரு காணொளியும் வெளியாகியது. மாணவர்கள் ஸ்கேட்டிங் செல்வது போலவும், அவர்களது தலையிலும் குப்பைகளை சுமந்திருப்பது போலவும் விளம்பரம் வெளியிட்டுள்ளார்கள். இந்த காணொளியுமே ஆட்சேபனைக்குரியது ஆகும். சிறார்களை எந்தவிதத்திலும் சமூக ஊடகங்களில் அவதூறாகவும், தவறாகவும் சித்தரிக்கக்கூடாது என சட்டம் இருக்கும்பட்சத்தில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் தெரிந்தே இப்படி ஒரு தவற்றினை செய்தது சரியல்ல. இதுகுறித்து ஜெண்டர் அண்ட் பாலிசி லேப் துறை அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் கடிதம் அனுப்பியும், நம்ம சென்னை செயலி மூலமாகவும் நேரிலும், கடிதம் மூலமாகவும் கோரிக்கை வைத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் சட்டத்திற்கு புறம்பாக கடமையை செய்யத்தவறிய அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

ஆகையால், உடனடியாக எனது மனுவின் அடிப்படையில் தக்க அலுவலர்களை விசாரணைக்கு உட்படுத்தி ஆட்சேபனைக்குரிய அந்த விளம்பர புகைப்படங்களை சென்னை மாநகராட்சி அதிகாரப்பூர்வ சமூக வலைதளங்களிலிருந்து உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கடமையை செய்யத் தவறிய அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை ஆம் ஆத்மி கட்சி சார்பாக தங்களை பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 25.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டு அறிக்கை ஏதும் பெறப்படாததால், நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனாலும், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 15.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தன்னுடைய 17.06.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மேற்படி வழக்கினை வருகிற 25.06.2026 அன்று விசாரணைக்கு போட்டுள்ளீர்கள். நான் அந்த தேதியில் விருதுநகர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஒரு வழக்கிற்காக ஆஜராக வேண்டியுள்ளது.

ஆகவே மேற்படி வழக்கினை வருகிற 24.06.2026 அன்றோ அல்லது 29.06.2026 விசாரணைக்காக போடப்பட்டால் என்னால் ஆஜராக முடியும் என்பதை பணிவுடன் ஒரு மூத்த வழக்கறிஞர் என்கிற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகையால் தயவுகூர்ந்து மேற்படி வழக்கு விசாரணையை முன்கூட்டியே 24.06.2026 அல்லது 29.06.2026 தேதியில் பட்டியலிடுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. மனுதாரர் 17.06.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கோரியவாறு, மேற்கண்ட மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 17.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு திட்டங்கள் துறை உதவிப் பொறியாளர் தனது 10.07.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"It is submitted that the social media post referred to in the Court proceedings was published by the Communication Cell under the supervision of the then Communication Cell in-charge Mr. Christy Leema Rose, who has since resigned from service.

It is further submitted that the said post was not an official initiative, scheme, or policy announcement of the Greater Chennai Corporation. The content was created and shared solely as part of the Thooimai Mission Campaign by Government, a public awareness campaign aimed at promoting cleanliness, proper waste management, and behavioural change among the public.

The message, ''நம்ம சுத்தமா இல்லனா, நம்ம எதிர்காலம் குப்பையோட தான் இருக்கும்'', was intended only to create public awareness and encourage cirizens to maintain cleanliness. The post was promotional and

educational in nature and did not represent or announce any official programme or initiative of the Greater Chennai Corporation.

Therefore, it is submitted that the social media post was circulated only for public awareness under the Thooimai Mission Campaign, and it should not be construed as an official initiative of the Greater Chennai Corporation.

This is submitted for kind information and further necessary aciton."

7. மனுதாரர் 10.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"கடந்த 29.05.2025 அன்று சென்னை பெருநகர மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளங்களான முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் ஒரு பெண்குழந்தையின் புகைப்படம் வெளியாகியது. அந்த பெண்குழந்தையின் தலையில் குப்பைகள் உள்ளது போல வடிவமைக்கப்பட்டிருந்ததை கண்டு உடனடியாக ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் மின்னஞ்சல் மூலமாக புகார் கடிதமும், சென்னை மாநகராட்சி இணைய வழி புகார் மூலமாகவும் பதிவு செய்தேன். ஆனால் எனது புகார் மீது எந்தவொரு நடவடிக்கையும், பதிலும் அளிக்காமல் கடந்த 30.05.2025 அன்று நடிகர் யோகிபாபுவின் படத்துடன் மீண்டும் அதே பெண் குழந்தையின் தலையில் குப்பைகளுடன் உள்ள புகைப்படம் வெளியாகியது. அதன்பிறகு ஒரு காணொளியும் வெளியாகியது. மாணவர்கள் ஸ்கேட்டிங் செல்வது போலவும், அவர்களது தலையிலும் குப்பைகளை சுமந்திருப்பது போலவும் விளம்பரம் வெளியிட்டுள்ளார்கள். இந்த காணொளியுமே ஆட்சேபனைக்குரியது ஆகும். சிறார்களை எந்தவிதத்திலும் சமூக ஊடகங்களில் அவதூறாகவும், தவறாகவும் சித்தரிக்கக்கூடாது என சட்டம் இருக்கும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் தெரிந்தே சிறுமியை இழிவு படுத்தும் நோக்கில் பதிவிட்டது மிகவும் கடுமையான தவறாகும். இப்படி ஒரு தவறினை செய்தது சரியல்ல. இதுகுறித்து சென்னை மாநகராட்சி ஆணையர், மேயர், ஜென்டர் அன்ட் பாலிசி லேப் துறை (Gender and Policy Lab. Department) அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் கடிதம் அனுப்பியும், நம்ம சென்னை செயலி மூலமாகவும் நேரிலும், கடிதம் மூலமாகவும் கோரிக்கை வைத்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நேரில் சந்தித்து புகார் அளித்தும் மேற்கண்ட புகைப்படத்தினை எக்ஸ் தளம் மற்றும் முகநூலில் இருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே இன்றுவரை முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் இருக்கும் மேற்கண்ட விளம்பர புகைப்படங்களை மற்றும் காணொளிகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், புகார் குறித்து ஒரு வருடம் கழித்தும், கடமையை செய்யத் தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி. ரிப்பன் மாளிகை, சிறப்பு திட்டங்கள் துறை உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி தொடர்பு அலுவலர் ஆகியோர் 10.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் வெளியான புகைப்படங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பது தொடர்பான புகைப்படங்கள் தவறானது என்று புகார்கள் வரப்பெற்றன. இவ்விளம்பரங்கள் "நம்ம சுத்தமா இல்லனா, நம்ம எதிர்காலம்

குப்பையோடுதான் இருக்கும்'' என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தூய்மை மிஷன் இயக்கம் அரசால் துவங்கப்பட்டு வெளியிடப்பட்டதாகும். எனவே இந்த புகைபடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்டதோ, திட்டமோ அல்லது கொள்கை முடிவோ அல்ல. இப்புகைப்படங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் மனுதாரர் தெரிவித்தவாறு சிறுமியின் தலையின் மீது குப்பையோடு இருக்கும் புகைப்படம் தவறானது என்பதால் அதனை முகநூல் மற்றும் எக்ஸ் தளம் ஆகியவற்றிலிருந்து உடனடியாக நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.''.

**9.** முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு திட்டங்கள் துறையின் உதவி பொறியாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி தொடர்பு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கடந்த **29.05.2025** அன்று சென்னை பெருநகர மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளங்களான முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் வெளியான புகைப்படத்தில் ஒரு பெண்குழந்தையின் தலையில் குப்பைகள் உள்ளது போல வடிவமைக்கப்பட்டிருந்ததை கண்டு உடனடியாக மின்னஞ்சல் மூலமாக புகார் கடிதமும், சென்னை மாநகராட்சி இணைய வழி மூலமாக புகாரும் பதிவு செய்யப்பட்டது என்பதும், மனுதாரர் புகார் மீது எந்தவொரு நடவடிக்கையும், பதிலும் அளிக்காமல், கடந்த **30.05.2025** அன்று நடிகர் யோகிபாபுவின் படத்துடன் மீண்டும் அதே பெண் குழந்தையின் தலையில் குப்பைகளுடன் உள்ள புகைப்படம் வெளியாகியும், மேலும் மாணவர்கள் ஸ்கேட்டிங் செல்வது போலவும், அவர்களது தலையிலும் குப்பைகளை சுமந்திருப்பது போலவும் விளம்பரம் வெளியிடப்பட்ட காணொளியுமே ஆட்சேபனைக்குரியது என்பதும், சிறார்களை எந்தவிதத்திலும் சமூக ஊடகங்களில் அவதூறாகவும், தவறாகவும் சித்தரிக்கக்கூடாது என சட்டம் இருக்கும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் தெரிந்தே சிறுமியை இவ்வாறு பதிவிட்டது மிகவும் கடுமையான தவறாகும் என்பதும், இதுகுறித்து சென்னை மாநகராட்சி ஆணையர், மேயர், ஜெண்டர் அன்ட் பாலிசி லேப் துறை (Gender and Policy Lab. Department) அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் கடிதம் அனுப்பியும், நம்ம சென்னை செயலி மூலமாகவும் நேரிலும், கடிதம் மூலமாகவும் கோரிக்கை வைத்தும், நேரில் சந்தித்து புகார் அளித்தும் மேற்கண்ட புகைப்படத்தினை எக்ஸ் தளம் மற்றும் முகநூலில் இருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் இருக்கும் மேற்கண்ட விளம்பர புகைப்படங்களை மற்றும் காணொளிகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்கவும், புகார் குறித்து ஒரு வருடம் கழித்தும், கடமையை செய்யத் தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் வெளியான புகைப்படங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பது தொடர்பான புகைப்படங்கள் தவறானது என்று புகார்கள் வரப்பெற்றன என்பதும், இவ்விளம்பரங்கள் ''நம்ம சுத்தமா இல்லனா, நம்ம எதிர்காலம் குப்பையோடுதான் இருக்கும்'' என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தூய்மை மிஷன் இயக்கம் அரசால் துவங்கப்பட்டு வெளியிடப்பட்டது என்பதும், இந்த புகைப்படங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்டதோ, திட்டமோ அல்லது கொள்கை முடிவோ அல்ல என்பதும், இப்புகைப்படங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தில் பதிவேற்றப் செய்யப்பட்டிருப்பினும், மனுதாரர் தெரிவித்தவாறு சிறுமியின் தலையின் மீது குப்பையோடு இருக்கும் புகைப்படம் தவறானது என்பதால்

அதனை முகநூல் மற்றும் எக்ஸ் தளம் ஆகியவற்றிலிருந்து உடனடியாக நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு திட்டங்கள் துறை உதவிப் பொறியாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி தொடர்பு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்தவாறு சிறுமியின் தலையின் மீது குப்பையோடு இருக்கும் புகைப்படம் தவறானது என்பதால் அதனை பெருநகர சென்னை மாநகராட்சி முகநூல் மற்றம் எக்ஸ் தளம் ஆகியவற்றிலிருந்து உடனடியாக நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு திட்டங்கள் துறை உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி தொடர்பு அலுவலர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. ம. சங்கர்,
கதவு எண் 578, லட்சுமி நகர் மெயின் ரோடு,
மடிப்பாக்கம், சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) கண்காணிப்பு பொறியாளர்,
Smart City Projects (Gender and Policy Lab Department),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(4) உதவி செயற்பொறியாளர்.
சிறப்பு திட்டங்கள் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி.
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை – 600 032

செயலாளர்.